பிரஸார் பாரதி
இந்திய வானொலி, சென்னை-4

**04 12 2024 WEDNESDAY** **6.30 PM**

மாநில செய்திகள்

தலைப்புச் செய்திகள்

- மகளிர் கூட்டுறவு அமைப்புகளை மேம்படுத்துவதற்காக 7 ஆயிரத்து 708 கோடி ரூபாய் நிதியுதவி வழங்கப்பட்டுள்ளதாக மத்திய கூட்டுறவுத்துறை அமைச்சர் திரு அமித் ஷா கூறியுள்ளார்.

- நாடு முழுவதும் 779 மாவட்டங்களில் 5-ஜி சேவை வழங்கப்பட்டுள்ளதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.

- பிஎஸ்எல்வி சி-59 ராக்கெட் மூலம், **PROBA-3** செயற்கைக்கோளை விண்ணில் செலுத்துவது தொழில்நுட்ப கோளாறு காரணமாக நாளைய தினத்திற்கு ஒத்திவைக்கப்படுவதாக இஸ்ரோ அறிவித்துள்ளது.

- தமிழகத்தில் மழை வெள்ள பாதிப்புக்காக அறிவிக்கப்பட்ட மாநில அரசின் நிவாரண உதவியை உயர்த்த வேண்டும் என்று பாமக வலியுறுத்தியுள்ளது.

- செவித்திறன் குறைபாடுடையவர்கள் பங்கேற்ற ஆசிய பசிபிக் விளையாட்டுப் போட்டியில் இந்தியா ஒரு தங்கம், இரண்டு வெள்ளிப் பதக்கங்களை வென்றது.

---- இனி விரிவான செய்திகள் ----

**<<<<<>>>>>**

மகளிர் கூட்டுறவு அமைப்புகளை மேம்படுத்துவதற்காக 7 ஆயிரத்து 708 கோடி ரூபாய் நிதியுதவி வழங்கப்பட்டுள்ளதாக மத்திய கூட்டுறவுத்துறை அமைச்சர் திரு அமித் ஷா கூறியுள்ளார்.

மாநிலங்களவையில் கேள்விநேரத்தின்போது இதனை தெரிவித்த அவர், தேசிய கூட்டுறவு மேம்பாட்டுக்கழகம் இந்த நிதியுதவியை வழங்கியதாக தெரிவித்தார்.

நாடு முழுவதும் 25 ஆயிரத்திற்கும் மேற்பட்ட மகளிர் நலனுக்கான கூட்டுறவு அமைப்புகள் பதிவு செய்யப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

மகளிர் கூட்டுறவு அமைப்புகளின் சமூக பொருளாதார மேம்பாட்டில், தேசிய கூட்டுறவு மேம்பாட்டுக்கழகம் முக்கிய பங்கு வகிப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

ஒரு லட்சத்திற்கும் மேற்பட்ட பால்வள கூட்டுறவு அமைப்புகள் செயல்பட்டு வருவதாகவும், இதில் பெரும்பாலும் பெண்கள் பணிபுரிந்து வருவதாகவும் திரு அமித் ஷா கூறினார்.

**<<<<<>>>>>**

ஊரக வளர்ச்சித்துறைக்கு நடப்பு நிதியாண்டில் ஒரு லட்சத்து 84 ஆயிரம் கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக அத்துறைக்கான மத்திய அமைச்சர் திரு சிவ்ராஜ் சிங் சௌகான் கூறியுள்ளார்.

இன்று புதுதில்லியில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், இதில் இதுவரை ஒரு லட்சத்து 3 ஆயிரம் கோடி ரூபாய் அளவிற்கு செலவிடப்பட்டுள்ளதாக குறிப்பிட்டார்.

லட்சாதிபதி பெண்கள் திட்டத்தின்கீழ், ஒரு கோடியே 15 லட்சத்துக்கும் மேற்பட்டோர் பயனடைந்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதி திட்டத்தின் செயலாக்கத்தை கண்காணிப்பதற்கென புதிய செயலி ஒன்று உருவாக்கப்பட உள்ளதாகவும் அமைச்சர் கூறினார்.

<<<<<>>>>>

நாடு முழுவதும் 779 மாவட்டங்களில் 5-ஜி சேவை வழங்கப்பட்டுள்ளதாக மத்திய இணையமைச்சர் திரு **Pemmasani Chandra Sekhar** கூறியுள்ளார்.

இன்று மக்களவையில் கேள்விநேரத்தின்போது இதனை தெரிவித்த அவர், எஞ்சியுள்ள நான்கு மாவட்டங்களுக்கும் விரைவில் இந்த சேவை வழங்கப்படும் என்றார்.

இந்த சேவையை வழங்குவதற்காக நான்கு லட்சத்திற்கும் மேற்பட்ட மையங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் கூறினார்.

<<<<<>>>>>

மத்திய அரசு மேற்கொண்டுவரும் தொடர் நடவடிக்கைகள் காரணமாக நக்சலைட் பிரச்சினை கட்டுக்குள் உள்ளதாக உள்துறை இணையமைச்சர் திரு நித்யானந்த ராய் கூறியுள்ளார்.

மாநிலங்களவையில் கேள்விநேரத்தின்போது இதனை தெரிவித்த அவர், கடந்த ஐந்தாண்டுகளில் மட்டும் நக்சலைட் பிரச்சினைகளிலிருந்து 60 மாவட்டங்கள் விடுவிக்கப்பட்டுள்ளதாக கூறினார்.

2010-ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில், நக்சலைட் தொடர்பான வன்முறை சம்பவங்களும் 73 சதவீதம் அளவிற்கு குறைந்துள்ளதாக அவர் தெரிவித்தார்.

நக்சலைட் பிரச்சினையால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் கடந்த ஐந்தாண்டுகளில் 4 ஆயிரத்து 153 கோடி ரூபாய் செலவில் வளர்ச்சித்திட்டப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் திரு நித்யானந்த ராய் தெரிவித்தார்.

<<<<<>>>>>

பிஎஸ்எல்வி சி-59 ராக்கெட் மூலம், **PROBA-3** செயற்கைக்கோளை விண்ணில் செலுத்துவது தொழில்நுட்ப கோளாறு காரணமாக நாளைய தினத்திற்கு ஒத்திவைக்கப்படுவதாக இஸ்ரோ அறிவித்துள்ளது.

ஸ்ரீஹரிகோட்டாவிலிருந்து இன்று மாலை மணி 4.8-க்கு செலுத்தப்படுவதாக இருந்த இந்த ராக்கெட், நாளை மாலை மணி 4.12-க்கு விண்ணில் செலுத்தப்படும் என்று இஸ்ரோ கூறியுள்ளது.

<<<<<>>>>>

பங்களாதேஷில் இந்துக்கள் மீது நடத்தப்படும் தாக்குதலை கண்டித்து மாநிலம் முழுவதும் பிஜேபி மற்றும் இந்து அமைப்பினர் சார்பில் ஆர்ப்பாட்டங்கள் நடைபெற்றன.

இந்த ஆர்ப்பாட்டங்களில் பங்கேற்க சென்ற பிஜேபி நிர்வாகிகள் மற்றும் அக்கட்சியினர் கைது செய்யப்பட்டனர்.

காவல்துறையின் இந்த நடவடிக்கை கண்டிக்கத்தக்கது என்று பிஜேபி கூறியுள்ளது.

<<<<<>>>>>

தமிழகத்தின் ஒரு சில பகுதிகளில் அடுத்த இரு தினங்களுக்கு மழைக்கு வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மைய இயக்குனர் திரு செந்தாமரை கண்ணன் கூறியுள்ளார்.

எமது செய்தியாளரிடம் பேசுகையில் அவர் இவ்வாறு கூறினார்.

*(சவுண்ட் பைட் - செந்தாமரை கண்ணன் - 34 செகண்ட்ஸ்)*

இதற்கிடையே, விழுப்புரம் மாவட்டத்தில் மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பல்வேறு கிராமங்களில் இன்னும் இயல்பு நிலை திரும்பவில்லை என்று எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

*(வாய்ஸ் பைட் - சுரேஷ் - 59 செகண்ட்ஸ்)*

சேலம் மாவட்டத்தில் கிழக்கு சரபங்கா ஆற்றின் தரைப்பாலம் காட்டாற்று வெள்ளத்தில் அடித்து செல்லப்பட்டதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

*(வாய்ஸ் பைட் - விஜயகுமார் - 35 செகண்ட்ஸ்)*

இதற்கிடையே, விழுப்புரம், கடலூர், கள்ளக்குறிச்சி மாவட்டங்களில் கனமழையால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு போர்கால அடிப்படையில் நிவாரண உதவிகள் வழங்கப்பட்டு வருவதாகவும் தமிழக அரசு கூறியுள்ளது.

இந்நிலையில், திருவண்ணாமலை மாவட்டத்தில் புயல் பாதிப்பு காரணமாக உயிரிழந்த மின்சார வாரிய ஊழியரின் குடும்பத்தினருக்கு ஐந்து லட்சம் ரூபாய் நிதியுதவியை மாநில அரசு அறிவித்துள்ளது.

<<<<<>>>>>

தமிழகத்தில் மழை வெள்ள பாதிப்புக்காக மாநில அரசு அறிவித்த நிவாரண உதவி போதுமானது அல்ல என்று பாமக நிறுவனர் மருத்துவர் ச ராமதாசு கூறியுள்ளார்.

இதுதொடர்பாக இன்று அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், கடலூர், விழுப்புரம், கள்ளக்குறிச்சி மாவட்டங்கள் மட்டுமின்றி, பிற மாவட்டங்களிலும் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு குறைந்தது 10 ஆயிரம் ரூபாய் இழப்பீடு வழங்க வேண்டும் என்று குறிப்பிட்டுள்ளார்.

கரும்புக்கு ஏக்கருக்கு ஒரு லட்சத்து 20 ஆயிரம் ரூபாயும், நிலக்கடலைக்கு 33 ஆயிரம் ரூபாயும், பிற பணப்பயிர்களுக்கு சந்தை மதிப்புக்கு ஏற்ப ஒரு லட்சத்து 25 ஆயிரம் ரூபாய் வரையும் வழங்க வேண்டும் என்று திரு ராமதாஸ் அந்த அறிக்கையில் கோரியுள்ளார்.

<<<<<>>>>>

*மாவட்டச் செய்திகள்*

திருவண்ணாமலையில் மண்சரிவில் உயிரிழந்தவர்களின் உடலுக்கு மாநில அமைச்சர் திரு எ வ வேலு இன்று மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்.

--------------------

பெரம்பலூர் மாவட்டத்தில் வாக்காளர் பட்டியலில் திருத்தங்களை மேற்கொள்வதற்கான சிறப்பு முகாம்களில் பெறப்பட்ட விண்ணப்பங்களை சரிபார்க்கும் பணியினை ஆட்சியர் திருமதி கிரேஸ் பச்சாவ் இன்று ஆய்வு செய்தார்.

--------------------

கள்ளக்குறிச்சி மாவட்டத்தில் காவல்துறை சார்பில், பொதுமக்கள் குறைதீர் கூட்டம் காவல்துறை கண்காணிப்பாளர் திரு ரஜத் சதுர்வேதி தலைமையில் நடைபெற்றது.

---------------------

கன்னியாகுமரி மாவட்டத்தில் சுற்றுச்சூழல் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில், மீண்டும் மஞ்சப்பை குறித்த விளம்பர பதாகைகள் அமைக்கப்பட்டு வருகின்றன.

<<<<<>>>>>

*விளையாட்டுச் செய்திகள்*

செவி திறன் குறைபாடுடையவர்கள் பங்கேற்ற ஆசிய பசிபிக் விளையாட்டுப் போட்டியில் இந்தியா ஒரு தங்கம், இரண்டு வெள்ளிப் பதக்கங்களை வென்றது.

மலேசியாவில் நடைபெற்றுவரும் இப்போட்டியின் தொடர் ஓட்டத்தில் இந்தியா தங்கப்பதக்கம் வென்றது.

ஆடவர் பிரிவு ஈட்டி எறிதலில் ரமேஷ் குமார் வெள்ளிப்பதக்கம் வென்றார்.

மகளிர் டேபிள் டென்னிஸ் பிரிவில் இந்தியாவிற்கு வெள்ளிப்பதக்கம் கிடைத்தது.

------------------

19 வயதுக்கு உட்பட்டோருக்கான ஆசிய கோப்பை கிரிக்கெட் போட்டியில், இந்தியா 10 விக்கெட் வித்தியாசத்தில் ஐக்கிய அரபு எமிரேட்டை வென்றது.

ஷார்ஜாவில் நடைபெற்ற இப்போட்டியில், டாஸ் வென்று முதலில் பேட் செய்த ஐக்கிய அரபு எமிரேட்ஸ் தொடக்கம் முதலே விக்கெட்டுகளை இழக்கத்தொடங்கி, 44 ஓவரில் 137 ரன்னுக்கு ஆட்டமிழந்தது.

138 ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்கோடு பின்னர் பேட் செய்த இந்தியா, அதிரடியாக ஆடி 16 புள்ளி ஒரு ஓவரிலேயே விக்கெட் இழப்பின்றி 143 ரன் எடுத்து வெற்றிபெற்றது.

<<<<<END>>>>>